## அந்நிய நாட்டவர்களை வேலைக்கு அமர்த்திய

# முதலாளிகளுக்கு அபராதம்

## டிபிகேஎல் நடவடிக்கை




கோலாலம்பூர், அக். 10-

இவ்வாண்டு தொடங்கி தலைநகர் கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் (டிபிகேஎல்) அமலாக்கப் பிரிவினர் மேற்கொண்ட அதிரடிச் சோதனையில் பெர்மிட் இன்றி அந்நிய நாட்டுத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்த கடை உரிமையாளர்களுக்கு 1,225 சம்மன்கள் சார்வு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. 2016ஆம் ஆண்டு அங்காடிக் கடை வியாபாரிகளின் லைசென்ஸ் சட்டம், 2002ஆம் ஆண்டு கோலாலம்பூர் பாசார் போரோங் சிறிய சட்டம் ஆகியவற்றின் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியது.

ஓப்ஸ் தெபா சோதனை நடவடிக்கையின் கீழ் அந்நிய நாட்டவர்கள் நடத்தி வந்த 4 கடைகளை மூடுமாறு உத்தரவிடப்பட்டதாகவும் அந்த அறிக்கை கூறியது. இச்சோதனை நடவடிக்கையில் போலீஸ், சுங்கத்துறை, குடிநுழைவுத்துறை, உள்நாட்டு வாணிப, வாழ்க்கை செலவினத்துறை அமைச்சின் அமலாக்கப் பிரிவினர் ஆகியோர் ஈடுபட்டதாக அந்த அறிக்கை கூறியது.

இவ்வாண்டு மட்டும் கோலாலம்பூர் மாநகர் மன்றம் நான்கு முறை இந்த ஓப்ஸ் தெபா சோதனை நடவடிக்கையை மேற்கொண்டது. அப்போது 11 கடைகள் மீது சோதனை நடத்தப்பட்டபோது 4 கடைகள் 1976ஆம் ஆண்டு வீடமைப்பு ஊராட்சி சட்டத்தின் 101 (1) (5) பிரிவின் கீழ் மூடப்பட்டதாகவும் அந்த அறிக்கை கூறியது. மற்றொரு சோதனை நடவடிக்கையில் கோலாலம்பூரில் உள்ள 59 கடைகளில் சோதனை மேற்கொள்ளப்பட்ட வேளையில் 18 கடைகளில் வியாபாரம் தடுத்து நிறுத்தப்பட்டது. இது தொடர்பாக 53 நோட்டீசுகள் சார்வு செய்யப்பட்ட வேளையில் 23 கடைகளில் உள்ள பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இது தொடர்பாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் 23 விசாரணை அறிக்கைகளைத் திறந்துள்ளது. இவ்வாண்டின் 9 மாதங்களில் 2,261 பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் அந்த அறிக்கை கூறியது. கடந்த 12.9.2024ஆம் தேதி கோலாலம்பூர் தாமான் மலூரியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் அந்நிய நாட்டவர்களால் நடத்தப்பட்டு வந்த இரண்டு கடைகள் மூடப்பட்டதாகவும் அந்த அறிக்கை கூறியது.